**இராஜபாளையம் நகராட்சி**

**31.01.2023**

**திருவள்ளுவர் ஆண்டு 2054 சுபகிருது வருடம் தை மாதம் 17 ம்தேதி 2023 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ம் தேதி செவ்வாய்க்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்ட மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை - திருமதி.எ.அ.சு.பவித்ரா ஷ்யாம் நகர்மன்றத்தலைவர்**

1 ) **நகர்மன்றத்தலைவர் திருமதி.எ.அ.சு.பவித்ராஷ்யாம் அவர்களால் பிரேரபிக்கப்படும் தீர்மானம்.**

**இராஜபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண் – 27 , கருப்பஞானியார் கோவில் தெரு (451.62 மீ) , வார்டு எண் – 31 - திருவனந்தபுரம் 4வது (327.39 மீ) மற்றும் 5வது தெரு ( 338.91 மீ) , வார்டு எண் – 33 - முகில்வண்ணம்பிள்ளை தெரு (243.24 மீ ) , மேற்கண்ட வார்டுகளில் உள்ள மேற்படி தெருக்களின் அகலம் அதிகமாக இருப்பதாகவும் ஏற்கனவே வார்டு -27 மற்றும் வார்டு 31 ல் தார்சாலை தளம் தான் அமைக்கப்பட்டு இருந்ததால் மேற்படி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு பதிலாக தார் சாலை அமைக்குமாறும் வார்டு 33ல் உள்ள தெருவில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் மேற்படி வார்டுகளின் நகர்மன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி வார்டு எண் – 27,31,33 வார்டுகளில் மேற்குறிப்பிட்டுள்ள தெருக்களில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு பதிலாக பொது மக்களின் நலன் கருதி அரசிற்கு உரிய கருத்துரு சமர்ப்பித்து அரசின் அனுமதி பெற்ற பின்னர் தார் சாலை மற்றும் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைப்பதற்கு இம்மன்றம் தீர்மானிக்கிறது.**

**தீர்மானம் எண் 6 நகர்மன்றத்தலைவர் திருமதி.எ.அ.சு.பவித்ராஷ்யாம் அவர்கள் பிரேரபிக்க நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.கு.கல்பனா அவர்கள் ஆமோதிக்க தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது .**

2 ) இராஜபாளையம் நகராட்சி டி.பி.மில்ஸ் ரோட்டில் ஏ.கே.பர்னிச்சர் அருகில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு ஆபத்தை உண்டாக்கும் நிலையில் உள்ளதால் சேதமடைந்த பாலத்தை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக சிறுபாலம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி சிறுபாலத்திற்கு மதிப்பீடு ரூ 12.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/139 /2022.

அலுவலகக்குறிப்பு-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 7 அனுமதிக்கப்பட்டது.**

3 ) இராஜபாளையம் நகராட்சிப்பகுதிகளில் நடைபெற்றுவரும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணி, பாதாளச்சாக்கடைத்திட்டப்பணி சம்மந்தமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடனும், சத்திரப்பட்டி மெயின் ரோட்டில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாலம் பணிகள் சம்மந்தமாக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடனும் சேர்ந்து ஆய்வுக்கூட்டம் நடத்த மாண்புமிகு பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 31.10.2022 அன்று வருகை தர இருப்பதால் நகராட்சி ஆய்வுக்கூட்டரங்கில் (Conference Hall) ஒலி வாங்கி (MIC Set) மற்றும் ஒலி பெருக்கி (Speaker) அமைக்கவும், நகர்மன்றக்கூட்டரங்கில் மர மேடை (Stage-platform) அமைக்கவும் வேண்டியது அவசியமாகிறது. அதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.7800/- ஆகலாம். அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/4630 /2022.

அலுவலகக்குறிப்பு-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 8 அனுமதிக்கப்பட்டது.

4 ) நகராட்சி அலுவலக வளாகத்தில் ஆணையாளர் அறையில் உட்புறம் , முதல் தளத்தில் உள்ள ஆய்வுக்கூட்டரங்கில் வண்ணம் அடித்து வாஸ்பேசின் அமைத்து நகர்மன்றக்கூட்டரங்கில் இருந்து கழிவறை செல்லும் பாதையில் உள்ள அறையில் அலுமினியம் போர்ஷன் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/0075 /2023.

அலுவலகக்குறிப்பு-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 9 அனுமதிக்கப்பட்டது.

5 ) இராஜபாளையம் நகராட்சி டி.பி.மில்ஸ் ரோட்டில் வ.உ.சி.சிலை அருகில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு ஆபத்தை உண்டாக்கும் நிலையில் உள்ளதால் சேதமடைந்த பாலத்தை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக சிறுபாலம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி சிறுபாலத்திற்கு மதிப்பீடு ரூ 10.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/141 /2023.

அலுவலகக்குறிப்பு-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 10 அனுமதிக்கப்பட்டது.**

6 ) இராஜபாளையம் நகராட்சியில் 15 வது நிதிக்குழுவின் 2021-22 ன் கீழ் வார்டு எண் **– 32** ஜவஹர் மைதானம் தெருவில் கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு செய்யும் பணிகள் ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கப்பட்டு வேலை துவங்கியதில் மேற்படி பழைய கழிப்பறை இருந்த ஆழ்குழாய் கிணற்றில் இருந்த மோட்டார் பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததால் புதிய மின் மோட்டார் பொருத்த வேண்டியது அவசியமாகிறது . மேலும் தரைத்தளம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தததால் தரைதளத்தை அப்புறப்படுத்தி கான்கீரிட் அமைத்து டைல்ஸ் அமைக்க வேண்டியதும் , கழிப்பிட கூரை மீது சேதமடைந்த தரைத்தள ஓடுகளை அப்புறப்படுத்தி புதிய தரைத்தள ஓடுகள் பதிக்க வேண்டியது போன்ற மதிப்பீட்டில் இல்லாத பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதால் மேற்படி கூடுதல் பணிகளை சேர்த்து திருத்திய மதிப்பீடு ரூ 6,06,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/5293/2021.

அலுவலகக்குறிப்பு-

1.மன்ற அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 11 அனுமதிக்கப்பட்டது.**

7 ) இராஜபாளையம் நகராட்சியில் 15 வது நிதிக்குழுவின் 2021-22 ன் கீழ் வார்டு எண் **– 28** லட்சுமியாபுரம் தெருவில் கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு செய்யும் பணிகள் ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கப்பட்டு வேலை துவங்கியதில் மேற்படி கழிப்பிடத்தில் கோப்பைகள் புதியதாக மாற்றுதல் , அவற்றில் டைல்ஸ் பதித்தல் மற்றும் குழாய் சாமான்கள் பொருத்தும் பணிகள் மதிப்பீட்டில் உள்ளதை விட கூடுதலாக மேற்கொள்ள வேண்டியது அவசியமானதால் மேற்படி கூடுதல் பணிகளை சேர்த்து திருத்திய மதிப்பீடு ரூ 4,85,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/5293/2021.

அலுவலகக்குறிப்பு-

1.மன்ற அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 12 அனுமதிக்கப்பட்டது.**

8 ) இந்நகராட்சி பெரிய கடை பஜார் சேதமடைந்த சார் பதிவாளர் அலுவலகம் அருகில் சேதமடைந்து உள்ள பெண்கள் சமுதாய கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்தி புதிய பெண்கள் சமுதாய கழிப்பிடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.15,00,000/-க்கு மன்றம் தனது 08.11.2019 தேதியிட்ட 313 எண்ணிட்ட தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கி வேலை துவக்கியதில் மேற்படி கழிப்பிடம் அமைய உள்ள இடம் மிகவும் மக்கள் நெருக்கடி மிகுந்த இடமாக இருப்பதாலும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் பயன்படுத்துவதாலும் ஏற்கனவே இருந்த கழிப்பறையில் இருந்த கழிப்பிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது அவசியமானது. அதனால் பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்க கழிப்பிடத்தின் நீளத்தை மற்றும் அகலத்தை அதிகப்படுத்தி கழிப்பிடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியதால் பலகை அடைப்பு மற்றும் ஆர்.சி.சி.கான்கீரீட்டின் அளவு (Quantity) கூடுதலாக மேற்கொள்ள வேண்டி வந்தது. மேலும் கோப்பைகளை கூடுதலாக அமைத்தல், அவற்றில் டைல்ஸ் பதித்தல் போன்ற இடங்களில் கூடுதலாக மேற்கொள்ள வேண்டி வந்தது மேற்படி கூடுதல் இனங்களை சேர்த்து தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.16,60,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1 ) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணி மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண் 13 அனுமதிக்கப்பட்டது.**

9 ) இராஜபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன் நகராட்சியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி ரூ.290.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 23..12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டில் பழைய கட்டிடங்களை இடிக்க வழிவகை செய்யப்படாததால் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் தங்குமிடம் , கழிப்பிடம் மற்றும் உணவகம் போன்றவற்றை இடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 9.90 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/1955/2022.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 14 அனுமதிக்கப்பட்டது.**

10 ) இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18ல் உள்ள விநாயகர் கோவில் தெருவில் பொதுமக்களுக்கு 2 Line 90mm PVC Pipe Line மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்தெருவில் இரு குறுக்கு சந்துகள் உள்ளது. இச்சந்துகள் குடிநீர் விநியோகத்தின் போது கடைசி பகுதியில் உள்ள வீடுகளில் தண்ணீர் சரியாக வரவில்லை, இதனால் அப்பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனார். இதனால் அப்பகுதி தண்ணீர் பற்றாக்குறை சரி செய்ய புதியதாக அத்தெருவில் 2 வால்வுகள் அமைத்து தண்ணீர் வழங்குவதற்கு திட்ட மதிப்பீடு தொகை ரூ.80000/-ற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 15 அனுமதிக்கப்பட்டது.

11 ) இராஜபாளையம் நகராட்சி பகுதிகுட்பட்ட வார்டு எண் 1 முதல் 42 வரை வார்டுகளில் பொதுமக்களின் குடிநீர் தலைமை நீரேற்ற நிலையத்தில் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீரில் குளோரின் Liquid கலந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குளோரின் Liquid குறைவாக இருப்பதால் வாங்குவதற்கு திட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 16 அனுமதிக்கப்பட்டது.

12 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 42 வரை வார்டுகளில் பொதுமக்களுக்கு 670 NO சின்டெக்ஸ் தொட்டி அமைத்து பொது மக்களுக்கு பயன்பாட்டிற்கு உள்ளது. மேற்கண்ட வார்டுகளில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் உடனடியாக சரி செய்ய திட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 17 அனுமதிக்கப்பட்டது.

13 ) இராஜபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் TN67W 8138 எண் கொண்ட டிராக்டர் தகுதிகாலம் (FC) முடிவடைந்த நிலையில் உள்ளது. தற்போது குடிநீர் பணிக்கு தேவைப்படுவதால் FC எடுப்பதற்கு டிராக்டர் டேங்கர் சர்வீஸ், சீட்கவர், Wiring Work, வெல்டிங் பணி, ஆயில் சர்வீஸ், கிரீஸ் மாற்றுதல் மற்றும் பெயிண்டிங் வேலை மற்றும் பழுது பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.45000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 18 அனுமதிக்கப்பட்டது.

14 ) இராஜபாளையம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் 133 தூய்மைப்பணியாளர்கள், 7 தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் வடகிழக்கு பருவ மழைக் காலங்களில் தடையில்லாமல் பணிபுரியவும், பொது சுகாதாரப்பணிகள் தடையின்றி நடைபெறவும் மேற்கண்ட பணியாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்க வேண்டியது அவசியமாகிறது.

எனவே உரிய நகராட்சி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கண்ட பணியாளர்களுக்கு மழைக்கோட்டுகள் 140 எண்ணம் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.80 லட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம்) ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. எச்1/5102/2022

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்காகும் செலவுத்தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3) பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 19 அனுமதிக்கப்பட்டது.

15 ) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் ந.க.எண் 22771/2005/எம்1 நாள். 31.05.2005ம் தேதிய கடிதத்தில் அரசாணை நிலை எண் 1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 04.01.1993ன்படி இராஜபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள காந்தி கலை மன்றம் அமைப்பிற்கு ஓராண்டுக்கு ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி

நன்கொடையாக வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2006-2007ம் ஆண்டு முதல் 2021-22ம் ஆண்டு வரை நகர்மன்றத்தீர்மான அனுமதி பெற்றும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.5000/-மிகாமல் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது காந்திகலை மன்ற நிர்வாகிகள் 2022-23ம் ஆண்டிற்கு நன்கொடையாக ரூ.5000/- வழங்குமாறு 16.12.2022ம் தேதிய கடிதத்தில் விண்ணப்பித்துள்ளார்கள். எனவே ரூ.5000/- மட்டும் காந்தி கலைமன்றத்திற்கு நன்கொடை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. 6934/2012/பி4

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 20 அனுமதிக்கப்பட்டது.

16 ) இராஜபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பிரிவு எண் 8ல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.பா.கருப்பசாமி என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக திருமங்கலம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்ய கோரியுள்ளார்.

எனவே அன்னாரை இராஜபாளையம் நகராட்சியிலிருந்து திருமங்கலம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. எச்1/7226/2022

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 21 அனுமதிக்கப்பட்டது.

17 ) இந்நகராட்சி சர்வே வார்டு B, பிளாக் 16, நகரளவு எண் 1ல் பாதாளசாக்கடை திட்டம் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க தடைவிதிக்க கோரி திரு.என்.எஸ்.ராமராஜ் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக்கிளையில் REV.APLW(MD) No. 49 of 2021ல் மேல்முறையீடு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர் ஆஜராவதற்கும், அதற்குரிய செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. எப்1/ந.க 3290/2021

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 22 அனுமதிக்கப்பட்டது.

18 ) இராஜபாளையம் நகராட்சி சர்வே வார்டு A, பிளாக் 1, புல எண் 13ல் சர்க்கார் புறம்போக்கு புளியந்தோப்பு சதுரக்கிணறு இடத்தில் புதியதாக ஊராட்சி ஒன்றிய அலுவலக

கட்டிடம் கட்டுவதை தடை விதிக்கக்கோரி திரு.கே.எஸ்.சகாதேவராஜா மேனேஜிங் டிரஸ்டி ஸ்ரீ ராமசாமி கோவில் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நகராட்சி ஆணையாளரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து W.P(MD) No 47 of 2023 ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர் ஆஜராகவும், அதற்குரிய செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. எப்1/ந.க.0009/2023

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 23 அனுமதிக்கப்பட்டது.**

19 ) இராஜபாளையம் நகராட்சி தர்மாபுரம் பாப்புராஜா தெரு சர்வே வார்டு C, பிளாக் 7, நகரளவு எண் 55 மற்றும் 58 இடத்தில் நகராட்சி அனுமதியின்றி கட்டிடம் கட்டிவருவது தொடர்பாக திரு.பி.அஸ்வத்ராஜா என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து W.P.(MD) NO 317 of 2023ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர் ஆஜராகவும், அதற்குரிய செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. எப்1/ந.க.எண் 000157/2023

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 24 அனுமதிக்கப்பட்டது.**

20 ) செவல்பட்டி வடக்குதெரு, சர்வே வார்டு F, பிளாக் 4, நகரளவு எண் 145ல் அமைந்துள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நிலம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து திரு.பி.கண்ணன் என்பவரால் CMP.(MD) NO 11506 of 2022 A.S (MD) Sr.No 33547 of 2022ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர் ஆஜராகவும், அதற்குரிய செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. எப்1/ந.க.7128/2022

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 25 அனுமதிக்கப்பட்டது.**

21 ) இராஜபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன் நகராட்சியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள பழைய கட்டிடங்களை இடிக்க வழிவகை செய்யப்படாததால் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் தங்குமிடம் , கழிப்பிடம் மற்றும் உணவகம் போன்றவற்றை இடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 9.90 லட்சத்திற்கு மதிப்பீட்டில் மேற்கொள்ள 13.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது . இதில் 2 ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது. இ1/1955/2022.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.குழந்தைவேலு | மதிப்பீட்டை விட 0.61 % அதிகம் |
| 2 | திரு.ஸ்ரீசரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட 0.14 % குறைவு |

மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.14 % குறைவாக கொடுத்துள்ள திரு.ஸ்ரீசரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.'

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.'

2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 26 அனுமதிக்கப்பட்டது.**

22 ) இராஜபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன் நகராட்சியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள 23.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி பழைய பேருந்து நிலைய கட்டிடத்தில் இடிக்கப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 49,500/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/1955/2022.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.குழந்தைவேலு அவர்கள் மூலம் பணி மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 27 அனுமதிக்கப்பட்டது.

23 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் - 6 , கோட்டை தலைவாசல் தெரு பெரியசாவடி பின்புறம் உள்ள பொதுக்கிணறு மூடி இல்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும் பொதுமக்கள் குப்பைகளை கிணற்றில் உள்ளே போடுவதை தடுப்பதற்கும் மூடி அமைக்க வேண்டியது அவசியமாகிறது . மேற்படி பணிக்குரிய உத்தேச செலவு ரூ 14500/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/480/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.குழந்தைவேலு அவர்கள் மூலம் பணி மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 28 அனுமதிக்கப்பட்டது.

24 ) இராஜபாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN67K3011ஐ டிப்பர் வாகனமாக மாற்றும் பணிகள் செய்யவும் மேலும் தகுதி சான்றிதழ் பெறும் பொருட்டு பழுது மற்றும் பராமரிப்புகள் செய்ய ரூ.9.00 லட்சம் மதிப்பீட்டில் 30.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்(ந.க.எண்.எச்1/2951/2022)

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்.லட்சுமி இன்டஸ்ட்ரீஸ்,<br>தங்கம் டி.வி.எஸ். அருகில்<br>ஒர்க்ஷாப் கார்னர், மேட்டூர் டேம் - 636401 | மதிப்பீட்டுத் தொகையை விட 3.45% குறைவு |
| 2. | திருவாளர்கள் மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ்<br>1எ5, தெர்மல் போர் ரோடு<br>தெர்மல் முதல் பாலம் அருகில்<br>மேட்டூர் டேம் - 636401 | மதிப்பீட்டுத் தொகையை விட 6.13% அதிகம் |

அலுவலகக்குறிப்பு

அ) அனுமதிக்கலாம்

ஆ) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை விட 3.45% குறைவாக அளித்துள்ள திருவாளர்கள்.லட்சுமி இன்டஸ்ட்ரீஸ், மேட்டூர்டேம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ) பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியம் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 29 அனுமதிக்கப்பட்டது.**

25 ) இராஜபாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN67AM0619ஐ டிப்பர் வாகனமாக மாற்றும் பணிகள் செய்யவும் மேலும் தகுதி சான்றிதழ் பெறும் பொருட்டு பழுது மற்றும் பராமரிப்புகள் செய்ய ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டில் 30.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (ந.க.எண்.எச்1/2950/2022)

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்.லட்சுமி இன்டஸ்ட்ரீஸ்,<br>தங்கம் டி.வி.எஸ். அருகில்<br>ஒர்க்ஷாப் கார்னர், மேட்டூர் டேம் - 636401 | மதிப்பீட்டுத் தொகையை விட 5.00% குறைவு |
| 2. | திருவாளர்கள் மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ்<br>1எ5, தெர்மல் போர் ரோடு<br>தெர்மல் முதல் பாலம் அருகில்<br>மேட்டூர் டேம் - 636401 | மதிப்பீட்டுத் தொகையை விட 0.52% குறைவு |

அலுவலகக்குறிப்பு

அ) அனுமதிக்கலாம்

ஆ) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை விட 5.00% குறைவாக அளித்துள்ள திருவாளர்கள்.லட்சுமி இன்டஸ்ட்ரீஸ், மேட்டூர்டேம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ) பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியம் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 30 அனுமதிக்கப்பட்டது.**

26) இராஜபாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN67AZ9290ஐ டிப்பர் வாகனமாக மாற்றும் பணிகள் செய்யவும் மேலும் தகுதி சான்றிதழ் பெறும் பொருட்டு பழுது மற்றும் பராமரிப்புகள் செய்ய ரூ.9.00 லட்சம் மதிப்பீட்டில் 30.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்(ந.க.எண்.எச்1/2952/2022)

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்.லட்சுமி இன்டஸ்ட்ரீஸ்,<br>தங்கம் டி.வி.எஸ். அருகில்<br>ஒர்க்ஷாப் கார்னர், மேட்டூர் டேம் - 636401 | மதிப்பீட்டுத் தொகையை விட 3.45% குறைவு |
| 2. | திருவாளர்கள் மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ்<br>1எ5, தெர்மல் போர் ரோடு<br>தெர்மல் முதல் பாலம் அருகில்<br>மேட்டூர் டேம் - 636401 | மதிப்பீட்டுத் தொகையை விட 6.13% அதிகம் |

அலுவலகக்குறிப்பு

அ) அனுமதிக்கலாம்

ஆ) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை விட 3.45% குறைவாக அளித்துள்ள திருவாளர்கள்.லட்சுமி இன்டஸ்ட்ரீஸ், மேட்டூர்டேம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ) பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியம் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 31 அனுமதிக்கப்பட்டது.**

27 ) இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய மற்றும் புதியபேருந்து நிலையத்தில் உள்ள குத்தகை தாரர்களால் குத்தகை வாடகை நிலுவைத்தொகையினை செலுத்தாமல் காலதாமதம் செய்ததால் நிலுவைத்தொகையினை செலுத்தக்கோரியும் மற்றும் அதற்கான **18** சதவீத தண்டவட்டித்தொகையினை நகராட்சிக்கு செலுத்தக்கோரியும், முறையே கடந்த **30.11.2022**ல் திருமதி.ரா.முப்பிடாதி,**2.**திரு.கி.ராஜாதேசிங்கு,**3.**திருமதி.க.செல்வமீனா,**4.**திரு.சரவணபாண்டியன்,**5.**திரு.டி.ஆதி,**6.**திரு.கி.ரமேஷ்,**7.**திரு.உ.வசந்தகுமார், மற்றும் **03.12.2022**ம் தேதியில் **8.**திரு.என்.இளங்கோவன்,**9.**திரு.கு.கார்த்திகேயன்,**10.**திரு.ஆர்.நம்பிராஜன்,**11.**திரு.ஆர்.வேங்கடசேகர் ஆகியோர்களுக்கு பதிவு தபால் மற்றும் ஒப்புகையுடன் மேற்கண்ட குத்தகை தாரர்களுக்கு வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பட்டது**.** மேற்காணும் வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பிய வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் வகைக்கு ரூ**.22000/–** ஐ **(** ரூபாய் இருபத்தி இரண்டாயிரம் மட்டும் **)** திரு.பி.டி.சந்திரசேகரராஜா வழங்கறிஞர் வழங்க கேட்டுள்ளார்**.** அ**1/947/201**

<u>வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட விபரம்</u>

| வரிசை எண் | குத்தகை உரிமதாரர் பெயர் | குத்தகை இனம் | நிலுவைத்தொகை |
|---|---|---|---|
| **1** | திருமதி.ரா.முப்பிடாதி | பழைய பேருந்து நிலையம் வடக்குப்பக்கம் உள்ள கடை எண்**.7** | ரூ**.402144/–** |

| | | | |
|---|---|---|---|
| 2 | திரு.கி.ராஜாதேசிங்கு | பழைய பேருந்து நிலையம் வடக்குப்பக்கம் உள்ள கடை எண்.8 | ரூ.304337/– |
| 3 | திருமதி.க.செல்வமீனா | எம்.யு.டி.எப். கடை எண்.23 | ரூ.95570/– |
| 4 | திரு.சரவண பாண்டியன் | பழைய பேருந்து நிலையம் தென்பக்கம் உள்ள கடை எண்.9 (தென்பக்க காலியிடம் ) | ரூ.44002/– |
| 5 | திரு.டி.ஆதி | பழைய பேருந்து நிலையம் இருசக்கர வாகன காப்பக குத்தகை உரிமம் | ரூ.433532/– |
| 6 | திரு.கி.ரமேஷ் | எம்.யு.டி.எப். கடை எண்.21 | ரூ.78934/– |
| 7 | திரு.உ.வசந்தகுமார் | பழைய பேருந்து நிலையம் வடக்குப்பக்கம் உள்ள கடை எண்.4 | ரூ.102183/– |
| 8 | திரு.என்.இளங்கோவன் | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை குத்தகை உரிமம் | ரூ.521095 |
| 9 | திரு.கு.கார்த்திகேயன் | எம்.யு.டி.எப். கடை எண்.23 | ரூ.18054/– |
| 10 | திரு.ஆர்.நம்பிராஜன் | புதிய பேருந்து நிலைய டெலிஷாப் | ரூ.7518/– |
| 11 | திரு.ஆர்.வேங்கடசேகர் | புதிய பேருந்து நிலைய டெலிஷாப் | ரூ.21890/– |

மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.22000/–ஐ ( ரூபாய் இருபத்தி இரண்டாயிரம் மட்டும் ) திரு.பி.டி.சந்திரசேகரராஜா வழங்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 32 அனுமதிக்கப்பட்டது.**

28 ) இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் ஏலத்தில் எடுத்து நடத்தி வருகிறார்கள். மேற்படி கழிப்பிடத்தில் சிறுநீர் கழிக்க ரூ.1/–ம் (ஒன்று மட்டும்), மலம் கழிக்க –ரூ.2/–ம்,(இரண்டு மட்டும்) வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஊதிய விகிதம்,

மின்சார கட்டணம், மற்றும் நிர்வாக செலவு போன்றவற்றை செய்து கழிப்பறையை பராமரிப்பது கடினம் என்பதாலும், குத்தகை உரிம இனத்திற்கு 5 சதவீதம் உயர்வு செய்ய வேண்டியுள்ளதாலும், மேலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வித கூடுதலாக குத்தகை உரிமதாரர் வசூல் செய்வதாக புகார் வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கழிப்பிடங்களில் தற்போது அனுபவித்து வரும் குத்தகை உரிமம் மற்றும் இனிவரும் காலங்களில் குத்தகை உரிமம் முடிவு பெற்று மறுபடி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் போது சிறுநீர் கழிக்க ரூ.4/—ம் , (நான்கு மட்டும்) மலம் கழிக்க ரூ.7/—ம் (ஏழு மட்டும்) நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

மேலும் இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் தற்பொழுது பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் ஏலத்தில் எடுத்து நடத்தி வருகிறார்கள். பொதுமக்களிடம் சைக்கிள் நிறுத்த கட்டணம்.ரூ.1/—ம், ஒன்று மட்டும்), பைக் நிறுத்தக் கட்டணம் ரூ.2/—ம் (இரண்டு மட்டும்) வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஊதிய விகிதம், மின்சார கட்டணம், மற்றும் நிர்வாக செலவு போன்றவற்றை செய்து இரு சக்கர வாக காப்பகத்தை பராமரிப்பது கடினம் கடினம் என்பதாலும், குத்தகை உரிம இனத்திற்கு 5 சதவீதம் உயர்வு செய்ய வேண்டியுள்ளதாலும், மேலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வித கூடுதலாக குத்தகை உரிமதாரர் வசூல் செய்வதாக புகார் வருகிறது. இதனை தவிர்க்கும் நோக்கில் மேற்படி இனத்திற்கு குத்தகை உரிமம் முடிவு பெற்ற பின் , புதியதாக பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது தற்போது அனுபவதித்து வரும் குத்தகை உரிமத்திற்கும் பொதுமக்களிம் சைக்கிள் நிறுத்தக்கட்டணம் ரூ.5/—ம் , (ஐந்து மட்டும்) பைக் நிறுத்தக்கட்டணம் ரூ.15/—ம் (பதினைந்து மட்டும்) நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது அ1/947/201

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 33 அனுமதிக்கப்பட்டது.

29 ) இராஜபாளையம் நகராட்சியில் வார்டு எண் - 31 , திருவனந்தபுரம் தெருவிலும் ,குறுக்குத்தெருவிலும் உள்ள சிறுபாலங்கள் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூராகவும் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதால் சிறுபாலங்கள் புதியதாக அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 95000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/501/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 34 அனுமதிக்கப்பட்டது.

30) இராபாளையம் நகராட்சியில் வார்டு எண் 38 சிதம்பரனார் தெரு மற்றும் குறுக்குத்தெருக்களில் உள்ள 3 சிறுபாலங்கள் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கும் , பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதால் புதியதாக 3 சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2.00/- லட்சத்திற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/499/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 35 அனுமதிக்கப்பட்டது.**

31 ) இராஜபாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர் பேட்டரி 150G51CV Capacity யில் 3 எண்ணம் மற்றும் 150F51CV Capactity யில் 1 எண்ணம் பேட்டரிகள் இயங்கி கொண்டிருந்தது தற்போது அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் மின்சாரம் தடை ஏற்படும் பொழுது ஜெனரேட்டர் இயக்க முடியவில்லை . எனவே அதனை சரி செய்ய Capactity யில் பேட்டரி வாங்கி பொருத்தி இயக்குவதற்கு திட்ட மதிப்பீடு தொகை ரூ 58000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ2/ /2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 36 அனுமதிக்கப்பட்டது.**

32 ) இராஜபாளையம் நகராட்சி தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் நிதியின்கீழ் வார்டு எண் 39ல் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்குரிய டெண்டர் திரு.எ.எ.ராதாகிருஷ்ணராஜா ஒப்பந்தக்காரருக்கு கிடைக்க பெறவில்லை. எனவே திரு.எ.எ.ராதாகிருஷ்ணராஜா ஒப்பந்தக்காரருக்கு காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண் 128, வ.எண் 86, வருடம் 17-18ன்படி தொகை ரூ.9000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் பார்வைக்கும முடிவுக்கும். இ1/2683/2017

அலுவலகக்குறிப்பு-

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 37 அனுமதிக்கப்பட்டது.**

33 ) இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய தென்பக்க பெட்டி கடையை பொது ஏல ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் எடுத்து கடை நடத்தி வந்த திருமதி.L.விஜயலட்சுமி

குத்தகைதாரர் தற்சமயம் பழைய பேருந்து நிலையம் புதுக்பித்தல் பணி நடைபெறவதால் வாடகை தொகை செலுத்த இயலாத நிலை உள்ளதால் தன்னுடைய வைப்பு தொகை ரூ.1,20,000/- ஈடு செய்யுமாறு கோரியுள்ளார். மேற்படி தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண் 99, வ.எண் 14, வருடம் 18-19ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும். அ1/2023/381

அலுவலகக்குறிப்பு-

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 38 அனுமதிக்கப்பட்டது.**

34 ) இந்நகராட்சிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பழுதடைந்த உட்புற அணுகு சாலையை மழைநீர் தேங்காவண்ணம் உயர்த்தி தார் பேச் அமைக்கும் பணிக்கு பில்லில் பிடித்தம் செய்த கூடுதல் பொறுப்பு தொகையை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண் 100, வ.எண் 88, வருடம் 15-16ன்படி தொகை ரூ.2500/-ஐ திரு.எ.எ.ராதாகிருஷ்ணராஜா ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும். இ1/3231/15

அலுவலகக்குறிப்பு-

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 39 அனுமதிக்கப்பட்டது.**

35 ) இந்நகராட்சியில் பழைய பேருந்துநிலையத்தில் கடை எண் 2ல் இளநீர் கடை நடத்தி வந்த திரு.P.K.பன்னீர்செல்வம் குத்தகைதாரர் தற்பொழுது கடையை மூடி விட்டதால் அன்னார் செலுத்திய வைப்பு தொகை ரூ.2760/- ஐ திரும்ப வழங்க கோரி உள்ளார். மேற்படியார் கோரும் தொகை காலங்கடந்து விட்டபடியால் காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண் 90, வ.எண் 20, வருடம் 17-18ன்படி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும். அ1/4364/2022

அலுவலகக்குறிப்பு-

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 40 அனுமதிக்கப்பட்டது.**

36 ) இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுவிசை மின் பம்புகள் பழுது மற்றும் பராமரிப்பு

பணிகள் ரூ.9.90லட்சம் மதிப்பீட்டில் செய்யும் பணிக்கு 13.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்காணும்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகன் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு இ2/484/2022

| வ.எண். | ஒப்பந்ததாரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எ.நைனார்முகமது | மதிப்பீட்டுத் தொகையை விட0.04 % குறைவு |
| 2. | திரு.எஸ்.வி.சத்தியநாராயணன், | மதிப்பீட்டுத் தொகையை விட1.32 % அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டுத் தொகையை விட 0.04 % குறைவாக அளித்துள்ள திரு.எ.நைனார்முகமது அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) அனுமதிக்கலாம்.
2) குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

## தீர்மானம் எண் 41 அனுமதிக்கப்பட்டது.

37 ) இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 42 வார்டுகளிலும் பொது மக்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பு செய்து வழங்குவதற்கு தலைமை நீரேற்று நிலையத்திற்கு சுத்திகரிப்பு பணிக்குத் தேவையான Sodium Hypochlorite Solution Liquid Chlorine) ரூ.9.90லட்சம் மதிப்பீட்டில் விநியோகம் செய்யும் பணிக்கு 13.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்காணும்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகன் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு இ2/483/2023

| வ.எண். | ஒப்பந்ததாரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எ.நைனார்முகமது | மதிப்பீட்டுத் தொகையை விட 0.68 % குறைவு |
| 2. | திரு.எஸ்.வி.சத்தியநாராயணன் | மதிப்பீட்டுத் தொகையை விட 23.26 % அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டுத் தொகையை விட 0.68 % குறைவாக அளித்துள்ள திரு.எ.நைனார்முகமது அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) அனுமதிக்கலாம்.
2) குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 42 அனுமதிக்கப்பட்டது.**

38 ) இராஜபாளையம் நகராட்சி சத்திரப்பட்டி மெயின் ரோட்டில் நெடுஞ்சாலைத்துறையினரால் மேம்பாலம் அமைக்கும் பணி துவங்கி நடைபெற்று வருவதால் , இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர இலகுரக வாகனங்கள் அனைத்திற்கும் மாற்று வழியாக கணபதியாபுரம் தெரு வழியாக சென்று ரயில்வே Underpass சிறுபாலத்திற்கு கீழ் பகுதி வழியாக பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி பாலத்திற்கு கீழே மழை பெய்யும் பொழுது மழைநீர் தேங்கி போக்குவரத்திற்கு இடையூராகவும் , சுகாதாரக்கேட்டையும் விளைவிப்பதால் மேற்படி ரயில்வே பாலத்திற்கு கீழ் உள்ள ( Underpass ) பகுதியில் Wet mix Macadam அமைத்து பேவர் பிளாக் பதிக்க வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,50,000/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/515/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 43 அனுமதிக்கப்பட்டது.**

39 ) இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 42 வரைகளில் உள்ள வார்டுகளில் சிறப்பு திட்டத்தின் கீழ் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் பழைய சாலைகள் தோண்டப்பட்டு புதிய சாலை அமைக்கும் பணிகள் நடைபெறும் போது தெருக்களில் உள்ள சின்டெக்ஸ் இருந்து குழாய்கள் பதிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு TAP அமைக்கப்பட்டுள்ள தற்போது PIPE LINE சேதமடைந்து வருவதால் அதனை சரிசெய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்  44 அனுமதிக்கப்பட்டது.**

40 ) இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 42 வரைகளில் உள்ள வார்டுகளில் பல இடங்களில் சின்டெக்ஸ் டேங் மற்றும் சின்டெக்ஸ் Side Bed இரண்டும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் தண்ணீர் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனை சரி செய்து தருமாறு பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர் எனவே சேதமடைந்த சின்டென்ஸ் சரி செய்ய திட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50/- லட்சம் தயார் செய்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 45 அனுமதிக்கப்பட்டது.**

41 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் - 6 வச்சவாரி தெருவில் ( கி.மூ.தெரு ) வடிகால் இல்லாமல் கழிவுநீர் தேங்கி பொது சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் மேற்படி தெருவில் சிறிய அளவிலான வடிகாலும் , சிறுபாலகும் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2,50,000/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/518/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 46 அனுமதிக்கப்பட்டது.**

42 ) இராஜபாளையம் நகராட்சி முடங்கியார் சாலையில் சம்மந்தபுரம் தெரு சந்திப்பில் போஸ் பார்க் எதிர்புறம் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி சிறுபாலத்தை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2,10,000/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/519/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 47 அனுமதிக்கப்பட்டது.**

43 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் - 18 , வடக்கு மலையடிப்பட்டி காமராஜர் புரத்தில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து கழிவுநீர் தேங்கி பொது சுகாதாரக்கேட்டை விளைவிப்பதோடு , பொதுமக்களின் போக்குவரத்திற்கும் கேடு விளைவிப்பதால் மேற்படி

சிறுபாலம் புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 49000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/520/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.பாஸ்கரன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 48 அனுமதிக்கப்பட்டது.

44) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் - 18 , வடக்கு மலையடிப்பட்டி பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து கழிவுநீர் தேங்கி பொது சுகாதாரக்கேட்டை விளைவிப்பதோடு , பொதுமக்களின் போக்குவரத்திற்கும் கேடு விளைவிப்பதால் மேற்படி சிறுபாலம் புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 49000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/521/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.பாஸ்கரன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 49 அனுமதிக்கப்பட்டது.

45 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் - 18 மற்றும் 19 களில் பெருமழையினால் கழிவுகள் தேங்கி தண்ணீரின் போக்கு தடைபட்டு பொது சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் மேற்படி பகுதியில் தனியார் JCB கொண்டு கழிவுகளை அகற்ற தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 50000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/4650/2022.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் மூலம் பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 50 அனுமதிக்கப்பட்டது.**

46 ) இராஜபாளையம் நகராட்சி மதுரை ராஜா கடை தெருவில் ( சொக்கர் கோவில் எதிர்புறம் ) உள்ள பணிபுரியும் மகளிர்கான தங்கும் விடுதி ( Working Womens hostel ) அமைந்துள்ள பகுதி ஓடையை ஒட்டி அமைந்துள்ளதாலும் சுற்றுச்சுவருக்கு உட்புறம் உள்ள பாதை மண் பாதையாக இருப்பதாலும் , விஷப்பூச்சிகள் வருவதால் மேற்படி பாதையில் பேவர்பிளாக் தளம் அமைக்கவும் தங்கியுள்ள மகளிர் பயன்பெறும் வகையிலும் மேற்படி பகுதி மக்கள் பயன்பெறும் வகையிலும் சிறிய சிற்றுண்டி விடுதி அமைக்கவும் மகளிர் அமர்ந்து சிற்றுண்டி உண்பதற்கு ஏதுவாக ஷெட் அமைப்பதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 12,00,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/523/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 51 அனுமதிக்கப்பட்டது.**

47 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் - 12 அண்ணாநகரில் உள்ள பெண்கள் கழிப்பிடம் ஆர்.சி.சி.கூரை பழுதுபட்டு பொதுமக்களின் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதில் சேதமடைந்த ஆர்.சி.சி.கூரையை அகற்றி புதிதாக ஆர்.சி.சி.கூரை அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் , அதே பகுதியில் உள்ள ஆண்கள் கழிப்பிடத்தில் கோப்பைகள் மற்றும் தரைத்தளங்கள் பழுதுபட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் இரண்டு கழிப்பிடங்களையும் பழுது பார்த்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 7,00,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/525/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 52 அனுமதிக்கப்பட்டது.**

48 ) இராஜபாளையம் நகராட்சி பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டத்திற்காக நகர் முழுவதும் உள்ள தெருக்களில் பாதாளச்சாக்கடைத்திட்ட குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று 95 சதவீதத்திற்கு மேல் முடிவடைந்துள்ள நிலையில் மேற்படி குழாய்கள் நகர் முழுவதம் தன் வாட்டத்தில் ( gravity ) பதிக்கப்பட்டு நீருற்று நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் நகர் முழுவதும் உள்ள சிறுபாலங்களின் குறுக்காக ( வடிகாலை மறித்து ) குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. அதனால் வடிகாலில் செல்லும் நீர் தேங்கி பெருமளவில் சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் ஏற்கனவே பல இடங்களில் சிறுபாலங்களை இடித்து அப்புறப்படுத்தி உயர்த்தி அமைத்து நீர் சீராக செல்லும் வகையில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நகர் முழுவதும் பல இடங்களில் பாதாளச்சாக்கடை குழாய் சிறுபாலங்களின் குறுக்காக பதித்ததனால் கழிவு நீர் தேங்குவதோடு பாலங்களின் சுவரும் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கும் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இருப்பதால் , தம்பாபிள்ளை தெரு , பெரிய சுரைக்காய்ப்பட்டி முப்பிடாதி அம்மன் கோவில் அருகில் , கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தெரு படிப்பகம் அருகில் , கட்டு விநாயகர் கோவில் தெரு , என்.ஆர்.கே மண்டபம் அருகில் , லட்சுமணப்பெருமாள் கோவில் தெரு ஆகிய 6 இடங்களில் சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 10.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/526/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 53 அனுமதிக்கப்பட்டது.

49 ) இராஜபாளையம் நகராட்சி பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டத்திற்காக நகர் முழுவதும் உள்ள தெருக்களில் பாதாளச்சாக்கடைத்திட்ட குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று 95 சதவீதத்திற்கு மேல் முடிவடைந்துள்ள நிலையில் மேற்படி குழாய்கள் நகர் முழுவதம் தன் வாட்டத்தில் ( gravity ) பதிக்கப்பட்டு நீருற்று நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் நகர் முழுவதும் உள்ள சிறுபாலங்களின் குறுக்காக ( வடிகாலை மறித்து ) குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. அதனால் வடிகாலில் செல்லும் நீர் தேங்கி பெருமளவில் சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் ஏற்கனவே பல இடங்களில் சிறுபாலங்களை இடித்து அப்புறப்படுத்தி உயர்த்தி அமைத்து நீர் சீராக செல்லும் வகையில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நகர் முழுவதும் பல இடங்களில் பாதாளச்சாக்கடை குழாய் சிறுபாலங்களின் குறுக்காக பதித்ததனால் கழிவு நீர் தேங்குவதோடு பாலங்களின் சுவரும் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கும் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இருப்பதால் , சம்மந்தபுரம் பெருமாள் கோவில் தெருவில் 2 இடங்களில் , முனியம்மன் கோவில் அருகில் , சம்மந்தப்புரம் முஸ்லீம் தெரு , சின்னசுரைக்காய்பட்டி சோடா கடை சந்து , சின்னசுரைக்காய்பட்டி - காளியம்மன் கோவில் மேற்புறம் , சின்னசுரைக்காய்பட்டி - மறவர் யாதவர் சாவடி எதிரில் மற்றும் சின்னசுரைக்காய்பட்டி - பாலசுப்பிரமணியன் வீடு எதிரில் ஆகிய 8 இடங்களில் சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு

தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 10.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/527/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 54 அனுமதிக்கப்பட்டது.

50 ) இராஜபாளையம் நகராட்சி பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டத்திற்காக நகர் முழுவதும் உள்ள தெருக்களில் பாதாளச்சாக்கடைத்திட்ட குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று 95 சதவீதத்திற்கு மேல் முடிவடைந்துள்ள நிலையில் மேற்படி குழாய்கள் நகர் முழுவதம் தன் வாட்டத்தில் ( gravity ) பதிக்கப்பட்டு நீருற்று நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் நகர் முழுவதும் உள்ள சிறுபாலங்களின் குறுக்காக ( வடிகாலை மறித்து ) குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. அதனால் வடிகாலில் செல்லும் நீர் தேங்கி பெருமளவில் சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் ஏற்கனவே பல இடங்களில் சிறுபாலங்களை இடித்து அப்புறப்படுத்தி உயர்த்தி அமைத்து நீர் சீராக செல்லும் வகையில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நகர் முழுவதும் பல இடங்களில் பாதாளச்சாக்கடை குழாய் சிறுபாலங்களின் குறுக்காக பதித்ததனால் கழிவு நீர் தேங்குவதோடு பாலங்களின் சுவரும் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கும் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இருப்பதால் , லட்சுமண பெருமாள் கோவில் தெருவில் 2 இடங்கள் , காமராஜர் நகர் , மேல ஆவரம்பட்டியில் 2 இடங்கள் , வடக்கு மலையடிப்பட்டியில் 2 இடங்கள் , வடக்குமலையடிப்பட்டி இரயில்வே கேட் அருகில் , சிங்கராஜா கோட்டை தெரு ஆகிய 9 இடங்களில் சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 10.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/528/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 55 அனுமதிக்கப்பட்டது.

51 ) இராஜபாளையம் நகராட்சி பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டத்திற்காக நகர் முழுவதும் உள்ள தெருக்களில் பாதாளச்சாக்கடைத்திட்ட குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று 95 சதவீதத்திற்கு மேல் முடிவடைந்துள்ள நிலையில் மேற்படி குழாய்கள் நகர் முழுவதம் தன் வாட்டத்தில் ( gravity ) பதிக்கப்பட்டு நீருற்று நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் நகர் முழுவதும் உள்ள சிறுபாலங்களின் குறுக்காக ( வடிகாலை மறித்து ) குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. அதனால் வடிகாலில் செல்லும் நீர் தேங்கி பெருமளவில் சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் ஏற்கனவே பல இடங்களில் சிறுபாலங்களை இடித்து அப்புறப்படுத்தி உயர்த்தி அமைத்து நீர் சீராக செல்லும் வகையில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நகர் முழுவதும் பல இடங்களில்

பாதாளச்சாக்கடை குழாய் சிறுபாலங்களின் குறுக்காக பதித்ததனால் கழிவு நீர் தேங்குவதோடு பாலங்களின் சுவரும் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கும் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இருப்பதால் , சின்னயராஜா தெரு , வரிக்கல்சிங்கராஜா தெரு , குண்டூர் மூர்த்தி ராஜா தெரு , குப்புசாமி ராஜா தெரு , பாரதிநகர் அங்கன்வாடி அருகில் , பேட்டை ராமசாமி கோவில் தெரு , தெற்கு வைத்தியநாதபுரம் ஆகிய 7 இடங்களில் சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 10.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/529/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 56 அனுமதிக்கப்பட்டது.

52 ) இராஜபாளையம் நகராட்சியில் மதுரை மெயின் ரோடு குமரன்தெரு சந்திப்பில் பாம்பே லாட்ஜ் அருகில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூராக இருப்பதாலும் தாழ்வாக இருப்பதால் கழிவு நீர் தேங்கி செல்வதால் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதால் உயரத்தை அதிகரித்து சிறுபாலம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 80000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/501/2023.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 57 அனுமதிக்கப்பட்டது.

53 ) இராஜபாளையம் நகராட்சி அம்மா உணவக பணியாளர்களின் மனுவின் படி நீராவியால் வேக வைக்கும் கொதிகலன் (Steam Boiler ) பழுதாகி பயன்படுத்த இயலாததால் பொது மக்களுக்கு தேவையான உணவுகளை குறித்த நேரத்தில் வழங்க இயலாமல் உள்ளதால் புதிய கொதிகலன் வாங்கித்தர கோரியுள்ளார்கள். மேலும் Single Burner , Gas stove ஒன்றும் வாங்கித்தர கோரியுள்ளார்கள். மேற்படி பொருட்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,70,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இ1/434/2023.

அலுவலகக்குறிப்பு -

1 ) மன்றம் அனுமதிக்கலாம்.

2 ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 58 அனுமதிக்கப்பட்டது.**

54 ) இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் ஒப்பந்தப் அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொண்டு வரும் AVM Service Point என்ற நிறுவனத்திற்கு 2016-17 ஆண்டு முதல் 2018-2019 ஆண்டு முடிய உள்ள ஆண்டிற்கான வைப்பு தொகையினை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டின்படி கீழே கண்டுள்ள விபரப்படி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும். எச்1/5091/2022

**2016-17**

| நாள் | ப.எண் | வ.எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 26.07.2016 | 111 | 52 | 500 |
| 07.09.2016 | 115 | 127 | 16580 |
| 02.02.2017 | 121 | 237 | 104000 |
| 02.02.2017 | 122 | 238 | 88000 |
| 02.02.2017 | 122 | 239 | 15750 |
| 02.02.2017 | 122 | 240 | 15750 |
| | | மொத்தம் | 240580/- |

**2017-18**

| நாள் | ப.எண் | வ.எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 07.04.17 | 125 | 1 | 16580 |
| 12.05.17 | 125 | 20 | 16580 |
| 07.06.17 | 127 | 50 | 16580 |
| 06.07.17 | 127 | 65 | 16580 |
| 16.08.17 | 128 | 84 | 16580 |
| 07.09.17 | 128 | 89 | 16580 |
| 12.12.17 | 129 | 103 | 63194 |
| 06.01.18 | 129 | 114 | 63194 |
| 07.02.18 | 130 | 124 | 63194 |
| 12.02.18 | 130 | 129 | 15500 |
| 12.02.18 | 130 | 130 | 7500 |
| 12.02.18 | 130 | 131 | 15500 |
| 12.02.18 | 130 | 132 | 7500 |
| 06.03.18 | 130 | 137 | 63194 |
| மொத்தம் | | | 398256/- |

**2018-19**

| நாள் | ப.எண் | வ.எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 05.04.18 | 132 | 2 | 63194 |

| | | | |
|---|---|---|---|
| 10.05.18 | 132 | 10 | 63194 |
| 07.06.18 | 132 | 12 | 63194 |
| 11.07.18 | 132 | 16 | 63194 |
| 06.08.18 | 133 | 31 | 63194 |
| 12.10.18 | 134 | 45 | 63194 |
| 22.10.18 | 134 | 46 | 63194 |
| 02.11.18 | 134 | 49 | 63194 |
| 12.12.18 | 134 | 61 | 63194 |
| 09.01.19 | 135 | 67 | 63194 |
| 07.02.19 | 135 | 68 | 63194 |
| 14.03.19 | 135 | 82 | 63194 |
| மொத்தம் | | | 758328/- |

| | |
|---|---|
| 2016-17 | ரூ.240580/- |
| 2017-18 | ரூ.398256/- |
| 2018-19 | ரூ.758328/- |
| மொத்தம் | ரூ.1397164/- |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 59 அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்)எ.அ.சு.பவித்ராஷ்யாம்**
**நகர்மன்ற தலைவர்**
**இராஜபாளையம் நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**இராஜபாளையம் நகராட்சி**